சத்தியரூப

# சதுர்வேததாற்பரியசங்கிரகம்.

யாழ்ப்பாணத்து

வடகோவைச்

சுயம்புநாதபிள்ளை

குமாரராகிய

வித்துவான்

## சபாபதிப்பிள்ளை

மொழிபெயர்த்தியற்றியது.

இஃது

அவர் மாணாக்கர்

ச. சிவப்பிரகாசபிள்ளையால்

காரைக்காலிலுள்ள

அச்சுக்கூடத்திற் பதிப்பிககப்பட்டது.

தாது௵ சித்திரை-௴.

*Registered Copyright.*

உ

கணபதி துணை.

அத்தியாயம்

# சதுர்வேததாற்பரியசங்கிரகம்.

## தற்சிறப்புப் பாயிரம்.

மதியணி சடைமுடி வானவனளித்த
கதிராருகனிற் பின் கண்ணருளாற் றீஇச்
சற்பருநாதன் பொற்கழல்வணங்கி
வரம்பெறு கலையெலா மொருங்குமுற்றுணர்ந்த
விரதத்தாபட புனைந்தமேலோ
னரதத்தாசாரியசூளாமணி
சிவனேபரனெனத் தேறியயாவரும்
வடமொழியதனிற் றிடமுறவருளிய
முதிர்போதங்காட்டு முதனூலான
சதுர்வேததாற்பரிய சங்கிரகத்தினை
யம்முறைமொழிபெயர்த் தரும்பொருடோன்றச்
செம்மைசேர் சடாவிடை சேர்கந்தெமர்த்
திருந்துநுணித் தெணிச்செய்புல
னருந்தமிழ்நாவலோ ரறிதரற்பொருட்டே.

## சிவ வணக்கம்.

எவன்வணக்கத்தினுக்குரிய
னெவன் குணங்களானிறைந்தோ
னெவன்வழிபாடியம்புநா
ராயணனென்னுபநிடத

மெவனமுயிர்ப்பிரேரகன்மற்
றெவன்வேள்விகளெலாநிறைவ
னவனுருமீசவனைக
கழிவியான் சரணடைந்தேன்.

வேதத்து மற்றதனுகவிரோத
தந்திரத்தும் விமலவனைப்
போதிக்கும் வாக்கியங்களெவற்றினையு
மறிந்தவற்றுற்போந்தமுட
வாதத்துக்கிடமாகாத்தாற்பரியந்
தினைச்சுருக்கி வரைப்பானுற்ற
பேதைக்குட்பேதையாமெனக்கருளி
மெய்ந்நெறியிற்பிரிவெய்தாய்.

## நூல்.

வேதமாவது மந்திரம் அருத்தவாதம் விதிவாக்கியமென மூவகைப்பட்டு, பிறவாக்கியங்களைப்பற்றாது தானே பிரமாணமாகி, விமற்சரர்க்கன்றிப் பிறர்க்கறியப்படாத மெய்ப்பொருளினையுடைத்தாய், ஈசுரனையே அறிவிப்பதாம். இனி ஈசுரசத்தம் யோகத்தாற் பிறகடவுளரையு முணர்த்து மேனும், யோகரூடியிறுற் சிவபிரானையே யுணர்த்துதலின், அவ்விறைவர்க்கே யுரிய பெயராம். யோகத்தினும் ரூடி வலியுடைத்தென் பது மீமாஞ்சை வழக்கெனவறிக. இது பற்றியன்றே நிகண்டு நூலுடையார் சிவாதிநாமங்கள்போல இதனைச்சிவநாமமாகக்கொண்டோதுவா ராயிற்றென்க. அற்றேல், மகேச்சுரன் பரமேசுரனென வொரோர்விதிப் பிறிதினியைபு நீக்கி விசேடிப்ப தெற்றிற்கெனின்; மகத் பரம வென்றும்

விசேடணங்கள் செந்ஞாயி றென்றாற்போலச் சிவபிரானை யியற்கையாகிய வுயர்பினையே குறித்து, இயைபின்மை நீக்குந் தன்மாத்திரையின் விசேடிக்க வந்தனவன்றிப் பிறிதினியைபு நீக்கி விசேடிக்க வந்தன வன்றென்க. அற்றேல், அங்ஙனம் விசேடித்துப் பயப்பதின்றெனின்;—அற்றன்று: பொருளின் கண் உயர்பியற்கையாக வுள்ளதேனும், விசேடணபதத்தான் விளங்குமென்பது சத்தநூலார் மதமாகலின், மகத் பரம வென்பனவற்றான் ஈசுரசத்தத்தின இயற்கையானவுயர்பு விளங்கலின், பயனுண்டென்க.

இனிக்காணப்படுமித்தப்பிரபஞ்ச மோரீசுரனாலன்றி நிலைபெறுதலுடைத்தன்று. அவ்வீசுரனும் ஏகனாதலன்றி அனேகனாதலும் பொருத்தமின்று. ஈசுரசத்த வாச்சியத்துவஞ் சிவபிரானுக்கன்றி ஏனைத்தேவர்க்கின்மையின், லோகவேதாதிகாரோபாயத்தினானே பிரபஞ்ச மவரானே நிலைபெறுதலுடைத்தென்றலே பொருத்தமுடைத்தென்க. சாங்கியரிலொருசாராரும் அவனை யனுவதிக்கும் பிறரும் பிரபஞ்சமீசுரனை யுடைத்தன்றென்றும், யோகநூலாரும் அவனை யனுவதிக்கும் பிறரும் மஃதீசுரனையுடைத்தென்றுங் கூறுப. இஃதென் சொல்லியவாறோவெனின், பன்மதத்தரு முதல்வனதுண்மை யின்மைகளை ஈசுரசத்தங்கொண்டே விவகரிப்பவென அதன் வழக்கு மிகுதி உலகின்கட்காட்டி ஏனைய விளக்குமுகத்தான், உலகிற்கு முதலாந்தன்மை சிவபிரானுக்கே பொருந்துமென்ற தமேற்கோளை வலியுறுத்த வாறென்க.

இவ்வாற்றாற் [illegible] அபரிச்சின்னசுவாதந்திரியமுண்மை சிவபிரானுக்கே [illegible] மை

அவருக்கே யுரித்தாமென்க. இதுபற்றியன்றே வேதங்கள் சிவபிரானுக்கே பெரும் பான்மையாக வணக்க வாக்கியங்கள் கூறியதூஉமென்க. அது சிவபிரானைக்குறித்துப் பகவ்யோசனை கூறிய "யாவனுக்கு வணக்கம் உரித்தாமோ அவன் பொருட்டு உன்னை நியோசிப்பேன்" என்னுஞ் சுருதியானும், சிவபெருமானைத் திப்பியமாகிய சிசுமாரவிருக்கத்தின் சிரசென்றுகூறிய "எது வணங்கற்பாற்று அது சிரசாம்" என்னுஞ் சுருதியானுமறிக. அஃதேல், சிவபிரானை யொழிந்தொழிந்த ஏனைத்தேவர்க்கும் வேதத்தில் ஆண்டாண்டு வணக்கங்கூறியதென்னையெனின்;— ஆற்றுநீர் கடலை யடையுமாறுபோல ஏனைத்தேவர் மாட்டுக் கூறப்பட்ட வணக்கங்கள் சிவபிரானையே சென்றடைதலின், அங்ஙனங் கூறப்பட்டதென்க. இவ்விரண்டு சுருதியானுஞ் சிவபிரானே வணக்கத்துக்குரியனென்பது மந்தபுத்தியுடையார்க்கு மினிது விளங்கும். அற்றேல், ஆண்டுப் பகவ்யோசனஞ் சிவபிரானுக்குரியதென எடுத்தோதாமையானும், "எது வணங்கற்பாற்று அது சிரசாம்" எனப் பொதுவாற்றாற் கூறியொழிதலானும், அவ்விரண்டு சுருதிகளானுங் கூறப்பட்ட வணக்கங்கள் சிவபிரானவென்றல் அமையாதாம்பிறவெனின்;— அற்றன்று: ஆண்டுக்கூறப்பட்ட சூலகவும் என்னுங் கிரியை சிவபிரானுக்கே உரியதென மந்திரங்களெல்லா முறையிடுதலானும், ஏனைத்தேவரெல்லாஞ் சிசுமார விருக்கத்தின் அவயவங்களாகக் கற்பித்தோதிக்கப்பட்டமையின் எஞ்சிநின்ற சிவபிரானே ஆண்டுச்சிரசாக வேண்டப்படுமென்பது பாரிசேட அளவை பற்றித்துணியப்படுதலானும், அஃதமைவுடைத்தென்க. இதுபற்றியன்றே பரதநூலார் இந்திரன், பிரமன், விட்டுணுவென்னுங்

தேவர்க்கு முறையே வச்சிரம், கமலம், சங்கமென்னுமுத்திரை களானும், சிவபிரானுக்குச் சிரசில் அஞ்சலிமுத்திரையானும், அபிநயங் கூறியதூஉமென்க. இனிப் பிரமன் முதலிய தேவர் தம்மைக் குறித்துச் செய்யப்படும் வணக்கங்களைத் தமக்கென என்றுகொள்ளக் கருதார்; என்னை? சோரனால் வெளவிக்கொணரப்படினும், முடியணி அரசற்கே யுரிய தாகலின், அதனை எவனும் என்றுகொள்ளக் கருதான்; கருது மாயின், அப்பெற்றியான் அரசனா லொறுக்கப்படுத லொருதலையாதல்போல அவருஞ் சிவபிரானாலொறுக்கப்படுதலொருதலை யாகலின். அற்றேல், அவரென்றுகொள்ளுமாறுதா னென்னையெனின்;-அவ்வணக்கத்தைச் சிவார்ப்பணஞ் செய் தலே என்றுகொள்ளுமாறென்க.

அற்றேல், சிவபிரானுக்கே நேராக வணக்கங்கூறலமை யும் அவர்மாட்டுக் கூறல்வேண்டாவெனின்;—அஃதொக்கு மன்றாயினும், உடம்பை உயிர் அதிட்டித்து நிற்றல்போல எல்லாப் பொருளையுஞ் சிவபிரான் அதிட்டித்து நிற்றலின், அவ்வியைபுபற்றி, அதிட்டிக்கப்படும் பொருள்கண்மாட்டும் அவர் வணக்கங் கூறப்பட்டதென்பது. இக்கருத்துப்பற்றி யன்றே திரு உருத்திரத்திற் செடிகளுக்கும் ருமலிகளுக்கும் ருமலிகளின் பதிகளுக்கும் வணக்கங் கூறியதூஉம், உலகத் திற் சிவபத்திக்கிழமைபற்றி ஈராகிய சிவனடியார் வணங்கப் படுவதூஉமென்க. இவ்வாற்றாற் சிவபிரானைக் குறித்துச் செய்யப்படும் வணக்கம் ஈசுரத்தன்மை குறிப்பதூஉம் அதனி யைபு குறிப்பதூஉமென இருவகைத் தென்பதூஉம், அவற் றுள் முன்னையது நேராகவும் பின்னையது அதிட்டிக்கப்படும் பொருள்வாயிலாகவுஞ் சிவபிரானை யடைப வென்பதூஉம்,

போந்தவாறுணர்க. இனிப் பின்னையதைச் சிரேட்டம் பற்
றியதென்பாருமுளர். சிரேட்டமில்லாதனவற்றின்கண் அதி
வியாத்திவருதலின், அஃததற்கிலக்கணமாதல் யாங்ஙனமென
மறுக்க. அல்லதூஉம், பசுக்களாகிய தேவர்க்குப்பதியாந்
தன்மைபற்றிச் சிவபிரானுக்குச் சிரேட்டப் பெயர்வழக்குச்
சாமவேதத்திற் றிருச்சிரமந்திரத்துட் பொதுவாகவும் வேதந்
தெரியாண்டுஞ் சிறப்பாகவுங் கூறப்படுதலின், அதுவும் அவர்க்
கேயன்றி ஏனைத் தேவர்க்குச் செல்லாமை யறிக.

. சிவபிரானை ஏனைத் தேவரோடொப்ப வைத்து வணங்க
லும், வாழ்த்தலும், வேள்விக்கண் விளித்தலு நன்றாகாவெ
ன்க. புத்திரகாமேட்டிக்கண் அவிசமைப்பிற் சோமதேவதை
யோடு உருத்திரன் ஒருங்கு விளிக்கப்பட்டமை வேதத்திற்
கேட்கப்படுதலின் அது பொருந்தாதெனின்; — அறியாதா க
டாயினாய். ஆண்டுச் சோமதேவதையோடு விளிக்கப்பட்ட
உருத்திரன் சிவபிரானல்லர் அக்கினியே யென்பது, ஆண்
டைப் "பிராதரக்கினிம்" என்னுஞ் சூக்தத்திற்றானே சிவ
பிரானுக்கு விளி வேறாகக் காணப்படுதலான், இனிது
விளங்குதலினென்க. அச்சூக்தத்திற் சிவபிரானுக்கு விளி
வேறாகக் காணப்படுதல் எற்றாற் பெறுதுமெனின்;-அம்மந்தி
ரசம்பந்தத் தகுதியுடைத்தாய் நிகழ்த்தாநின்ற கிரியாபதத்தை
யொழித்துச் சிவபிரானது விளிக்கண் வேறு கிரியாபதம் பிர
யோகித்தமையாற் பெறுதுமென்பது. அல்லதூஉம், இவ்
வாசகங்களையொழித்தற்கு ஏனைத்தேவரை விளித்த மந்திரங்
களுஞ் சிவபிரானை விளித்த மந்திரத்தினிடையே, "உத"
என்னும் பதந் தலைப்பெய்துள்ளன வென்க.

அற்றேலஃதங்ஙனமாக; ஆண்டு உருத்திரபதம் அக்கினியை உணர்த்தற்குப் பிரமாணமென்னை யெனிற் கூறுதும். முன்னோர் காலத்திற் றேவர்கட்கும் அசுரர்கட்கும் பூசனிகழ்ந்தது. அப்பொழுது தேவர் தந் தனத்தைப்பாதுகாக்க அக்கினி மாட்டுவைத்தனர். வைக்கப்பட்ட தனத்தை அக்கினி அபகரித்துக் கொண்டனன். அது பற்றி அவர் அவனை வலி செய்யலுற்றுழி, அவன் ரோதனஞ் செய்தனன். அதனான், அக்கினிக்கு உருத்திரப் பெயர் வழக்குண்டாயிற்றென்றறிக. அஃதேல், மருத்துக்களுக்குஞ் சிவகணங்கட்கும் உருத்திரப் பெயர் வழங்குமாறென்னையெனின்; — உருத்திரனினின்றுந் தோன்றினமையின் அவர்க்கும் அப்பெயர்வழக்குண்டாயிற்றென்க. சிவபிரானுக்கோவெனின், உயிர்களுக்குச் ஸம்ஸாரரோகத்தை யொழித்தற்காரணத்தால் அப்பெயருடைமையாயிற்றென்க. யசுர்வேதத்தில் ஆருணமென்னுஞ் சாகையில் யாகத்திற்கும் உருத்திரப்பெயர் கேட்கப்படுமெனின், ஒரு பொருட் பெயர் அதனோடியைபுடைப்பிறிது பொருட்குமாகு நெறியுண்மையின், உருத்திரனோடியைபுடைத்தாய யாகத்திற் கஃதாகு பெயராயிற்றென்க. தாபத்தை உயிர்க்கு விளைத்து அவை இரங்கச்செய்தலின், சுரத்திற்கும் அப்பெயர் வழக்குண்டு. ரௌத்திரமோவெனின், அஃதும் அதனைப் பகுதியாகவுடைய தத்திதமென்க. அல்லதூஉம், வாயசம், பாகவதன், ஸாத்துவதனென்றற் றொடக்கத்தனபோற் றத்திதபதப் பிரதிருபமெனினுமமையும்.

ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியமென்னுமாறும் பகமெனப்படுதலின், இவை சிவபிரானுக்கே யுண்மையின், அவரே பகவனெனப்படுவர்.

அற்றேல், இவை யாறுஞ் சிவபிரானுக்குள்ளன வென்பதற்குப் பிரமாண மென்னையெனின்;—அவர்க்கு ஐசுவரிய முண்மைக்கு ஈசுர பதச்சுருதியும், வீரியமுண்மைக்கு உக்கிர பதச் சுருதியும், புகழுண்மைக்குச்சிவபதச்சுருதியும், திருவுண்மைக்கு இருக்குவேதமும், ஞானமுண்மைக்குச் சருவஞ்ஞ சுருதியும், வைராக்கியமுண்மைக்குக் காமரிபு பதச்சுருதியும் பிரமாணமாமென்க. "திருவினுற்சிரேட்டர்" என்றும், "திருவையெய்தும் பொருட்டுச் சிவபிரானது விசித்திரரூபமாகிய லிங்கந் தேவராற் பூசிக்கப்பட்டது" என்று மிருக்குவேதங் கூறலின், ஈண்டுத்திருவெனப்பட்டது பொருட்டிருவன்றென்க. வாய்மை, பொறை, தைரியம், அதிட்டித்தல், ஆன்மபோதம், சிருட்டித்தல், ஆசையின்மை, தவம், புத்தி, ஈசரத்துவ மென்னுந் தசகுணங்களும் தருமமுஞ் சிவபிரானுக்கே யியைவன. இனி ஐசுவரியமுடையார், பெரும் புகழுடையார், வீரர், செல்வர், அரசர், சக்கிரவர்த்திகளென்னு மிவரையும் இன்னோரன்ன வியல்புடைய பிறரையும் பகவப்பெயரான் வழங்கார். மெய்யுணர்ந்தவாவறுத்தார்கட் சிவம் பிரகாசித்த லுண்மையின், அவரைப் பகவப்பெயரான் வழங்குப.

அற்றேலஃதாக; பகவப்பெயர் சிவபிரானுக்குரியதென்பதற் கெடுத்தோத் துண்டோவெனின்;—அதர்வணவேதமுடையார் சிவநாமங்களுட் பகவ நாமங் கூறுதலானும், சுவேதாச்சுவதரோபநிடதஞ் சிவபிரானையே "பகவன்" எனக் கூறுதலானும், எடுத்தோத்துண்டென்க. ஆகமநூலுடையார் பூசிக்கப்படுங்குணமுடையானையே பகவனென்ப.

இனி மந்திரங்களானுஞ் செய்யப்படும் பூசை சிவபிரானுடையதே, திரு உருத்திரத்தில் "அவனேத்துதி" என்

று மந்திரத்தான் விதிக்கப்பட்டமையின். அன்றியும், உபநிட தங்களெல்லாஞ் சிவோபாசனை செயற்பாற்றெனன முறையிடு கின்றன. அவற்றுள், நாராயணோபநிடதம்பற்றிச் சிவோபா சனையை ஆராய்குதும். நாராயணோபநிடதத்திற் கூறிய உபா சனை சிவோபாசனை யென்பதூஉ அதன்கட் கூறிய உபா சிக்கப்படும் பொருளினது உருவஞ் சிவரூபமென்பதூஉம், பிராந்சகர் கூறும் உபக்கிரமோபசங்காரநியாயம் பற்றித் தெளியப்படும், அதன்கண் உபாசனையைக் கூறிய தொடங்கிய உபக்கிரமத்தின் கணுள்ள வாக்கியஞ் சிவரூபங் கூறிமுடி த்த உபசங்கார வாக்கியத்தோடியைந்து ஒரு பொருள் படுத லின். இங்ஙனந்துணியப்படவே, ஆண்டு நாராயணனுக்கு உபாசிக்கப் படுந்தன்மையும் உபாசனையாந் தன்மையும் ஓரா ற்றானும் பொருந்தாமையின், அவன் அவ்விரண்டுமல்லனென் பதூஉம், பாரிசேடத்தால் உபாசகனென்பதூஉம், போதரும். அல்லதூஉம், ஆண்டு "நாராயணனுடைய இருதயாக்கினியின் சிகாமத்தியிற் பரமான்மாவுளன்" என்ற வாக்கியமே, வேறு பிரமாணம் வேண்டாது, அவனுபாசகனென்பதை வலியுறு த்தும். அது வலியுறுத்து மாறென்னையெனின்;-"நாராயண னுடைய இருதயத்திற் பரமான்மாவுளன்" என்று கூறின மையின், அவனைப் பரமான்மாவென்றல் பொருந்தாமையி னென்க. நாராயணன் "றனதிருதயாக்கினிக்கணிருந்துகொ ண்டு தானே தன்னை யுபாசிப்பனெனின்;—அக்கூற்றியாவர் க்கு நகைவிளைக்குமென்றொழிக.

அற்றேலஃதாக; நாராயணன் மெல்லைத்துபாசனையை வருணித்தவாறென்னையெனின்;—நாராயணனுடைய விருத யமும், அதன்கட்டகரமும், அதன்கட் பெரிய அக்கினியும்,

அதன்சிகாமத்தியிற் பரமான்மாவு மொன்றென் றங்ஙன மருந்தவாதம்படக் கூறுமுகத்தானே, ஆசரிப்பவருக்குச் சிரத்தை போதர விசிட்டபுருடன்மேல்வைத்து, உபாசனையை விதித்த வாறென்க.

அற்றேல், ஆண்டு இருதயம் வேறோதப்பட்டதனான் அது நாராயணனுடைய தென்றல் பொருந்தாதாம் பிறவெனின்;—அற்றன்று: நாராயணப் பிரகரணத்திற் கூறப்பட்ட விருதயம் பிறனைச்சார்தற் கியையின்மையின் அஃதவனுடைய தென்றல் பொருந்து மென்க.

அற்றேலஃதங்ஙனமாக; யதிப்பிரகரணத்திற் பூர்வாநுவாகத்தான் விதிக்கப்பட்ட உபாசனை யாவர்கண்ணதெனின், ஆண்டையியைபு பற்றி ஆராய்வார்க்கு அதுவுஞ் சிவபிரான் கண்ணதென்பது தெற்றெனப் புலப்படுமென்க. அஃதேல், ஆண்டு நாராயணனைப் "பரப்பிரமம்" என்றும், "பரஞ்சோதி" என்றும், "பரதத்துவம்" என்றுங் கூறுதன் மலைவாம்பிறவெனின்; — அற்றன்று: மாந்திரிகன் கருடபாவனையாற் கருடனோடத்துவிதமாய் நின்றவழி அக்கருடனென்றே கருதப்படுதல்போல நாராயணன் சிவபாவனையாற் சிவபிரானோடத்துவிதமாய் நின்றவழி அங்ஙன முபசரிக்கப்பட்டானாகலின், மலைவியாண்டையதென்க. இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல் செவியறிவுறுத்த கண்ணன் "யானே உலகெல்லாமாயினேன்" என்றதூஉம், சிவபிரானது விசுவரூபத்தைக் காட்டியதூஉம், "ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடு" என்றதூஉம், அதனை உறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன்கூறிய கருத்தநோக்

கிச் சாங்காறுஞ் சிவபூசை செய்ததூஉம், கண்ணன் மேலிட்ட போதுகள் சிவபிரான் றிருமுடிமேற் கண்டதூஉமென்க.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில்வைத்துப் பிரமன்முதலிய தேவரோடு சிவபிரான்படிக்கப்படுதன் மலைவாம்பிறவெனின்; —அற்றன்று: ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் வைத்துப் பிரமன் முதலிய தேவரோடு படிக்கப் பட்டமையின் சிவசத்தத்தானுணர்த்தப்படுபவன் சங்காரத் தொழிலைச்செய்யு மரனென்பது தெள்ளிதிற் பெறப்படுதலி னானும், ஆண்டுப் பரமான்மா வெனப்பட்டவர் அயனரி யர னென்னுந் திரிமூர்த்திகளையு நியமிக்குந் துரிய மூர்த்தியாகிய சிவபிரானாகலானும், சிருட்டித்தொழில் திதித்தொழில்களைச் செய்யு மயனரிபோற் சங்காரத் தொழிலைச் செய்யு மரனும் அவரது விபூதியே யாகலானும், மலைவுயான்டையதென்பது.

அற்றேல், ஆண்டுப் பரமான்மாவின் விபூதியில் நாராயணனைப் படியாத தென்னையெனின்;—கைவல்லியோபநிடதத்திற் கூறிய தகர வித்தையில் அவனும் விபூதியிற் படிக்கப் பட்டானாகலின், இவ்வுபநிடதத்திற் படியாதுய்த்துணரவைத்த தென்பது.

சிவபிரான் விச்சுவாதிகர்; நாராயணன் விசுவம். அவர் யாகத்துக் கதிபர்; அவன் யாகம். அவர் மூலப் பிரகிருதிக்கு நிமித்தகாரணர்; அவன் மூலப்பிரகிருதி. இங்ஙன மாகலின், இருவர்க்கும் வேற்றுமை பெரிதென்க.

அற்றேல், நாராயணனை "விசுவ பதி" என்றதென்னையெனின்;—அது துசிவாதமென்க. வேதத்திலொரோவழிச் சிவபிரானை "விசுவம்" என்றது, அவர் அதனை அதிட்டித்திருத்

தல் பற்றியாகலின், அஃதுபசார மாத்திரையேயென்க. இவ்வுண்மை வேதரகசியத்தை யுணர்ந்த பண்டிதர்க்கே விளங்கும். அது முற்றுணர்வெய்திய காத்தியாயனமுனிவர் கிரகிய சூத்திரத்தில் எல்லாப் பொருளுஞ் சிவபிரானால் அதிட்டிக்கப்படுதல் பற்றி எல்லாக்கிரியையினும் அவர்க்கு வணக்கங்கூறியதனானும், அதனை வலியுறுத்தற்பொருட்டு "எல்லாப்பொருளுமுருத்திரன்,, என்னு மநுவாகத்தை உதாகரித்தமையானும் விளங்கும். சிவபிரானை "விசுவம்" என்றதை உபசாரமென்றறிய மாட்டாது, உண்மையென்று மயங்குவாருமுளர்.

இங்ஙனம் உபாசனையும், உபாசகனும், உபாசிக்கப்படும் பொருளாகிய விரூபாக்கரும், அவருடைய நானாவித விபூதியு நாராயணோப நிடதத்தாற் போந்தவாறுகாண்க.

அற்றேலஃதாக; சிவபிரானைப் பிரதிபாதிக்கு மிது நாராயணோபநிடதமென்றாய வாறென்னையெனின்; —புருடசூக்தம் நாராயணனை இருடியாக வுடைத்தாயவாறுபோலச் சிவபிரானைப் பிரதிபாதிக்கு மிது எச்சரூபனாகிய நாராயணனை இருடியினான் உபதேசிக்கப்பட்டமையின், நாராயணோபநிடதமென்றாயதென்க.

இவ்வுபநிடதத்து "சிவபிரானிடத்தினின்றும் இரணியகருப்பன் றேவர்யாவர்க்கு முதற்கட்டோன்றினன்" என்று கூறுகின்றது. இங்ஙனமாகவும், "நாராயணனிடத்தினின்றும் இரணியகருப்பன் றோன்றினன்" என்றும், "அவனிடத்தினின்றுஞ் சிவபிரான் றோன்றினார்" என்றுமறிவில்லார் பிதற்றுப. சிவயோகிகளுடைய இருதயமுதலிய வைந்திடத்தினுஞ் சிவபிரானுக்குத் தோற்றமுண்மையின், இரணிய கருப்பனு

டைய இலாடமத்தியிற் சிவபிரான்றோன்றியருளினரென்னும் வழக்காற் போதரு மிழுக்கென்னோ வெனின் ஆறு.

திருஉருத்திரத்துட்டிருவைந்தெழுத்திருத்தல்போலச் சிவமந்திரங்கட்குயிராய்ச் சிவபிரானுக்குமந்திரத் திருமேனியாயுள்ள பஞ்சப்பிரமம் இதனகத்துண்மையின், இது மகோபநிடதமெனவும் பெயர் பெறுமென்க.

இனிப் பஞ்சப்பிரம மந்திரத்து ளொன்றாகிய ஈசான மந்திரம் சிவபிரான் "வித்தை யெல்லாவற்றிற்கு மீசர், என்றும் "பூதங்களெல்லாவற்றிற்கும் பதி" என்றும் "பிரமாவுக்கதிபதி,, என்றும் "பிராமணருக்கதிபர்" என்றுங் கூறுகின்றது. இதன்கட் "பிரமாதிபதி" என்றதற்கு "வேதத்திற்கதிபதி" என்றுரைப்பாருமுளர். மேல் "வித்தை யெல்லாவற்றிற்கு மீசர்,, என்றதனாற்றானே வேதமும் அதன் வழித்தோன்றிய பிறவித்தைகளும் அடங்குதலின், அது போலியுரையென மறுக்க.

இருக்கு முதலிய வேதத்திரயங்களாகிய நிதிக்குக் கோசமாகிய மண்டலத்தி லிருக்கு மாதித்தனை அதிட்டித்திருக்கும் புருடராகிய சிவபிரானை ஆதித்தியோபநிடதம் "இவனே பூதாதிபதி" என்று சுட்டிக்கூறுகின்றது. "இவனே பூதாதிபதி" என்றன் மாத்திரையானே ஆதித்தியாந்தரியாமி சிவபிரானென்பது துணியப்படாதாம்பிறவெனின்; — ஆற்றன்று: • "இரணியமயன்" என்றும், "இரணிய வாகு" என்றும், "அம்பிகாபதி" என்றும், "உமாபதி" என்றுமவ்வுபநிடதங்கூறுதலின், ஆதித்தியாந்தரியாமி சிவபிரானே யென்பது தெற்றெனத் துணியப்படுமென்க. மண்டலமும்,

அதிலாதித்தனும், அவற் கதிட்டாதாவாகிய சிவபிரானும், அவர் விபூதியும், அவற்றினையுணர்ந்தாரெய்தும்பயனு மென்னு மிவை ஆதித்தியோபநிடதத்தாற் போதரும் பொருள்களாம். இதனை யுணர்ந்தார் காயத்திரியையு முணர்ந்தாரேயாவர்.

இனிக் காயத்திரிக்குரிய பொருள் சிவபிரானேயெனத் துணிதற்கு, ஆதித்தியோபநிடதமே அமையுஞ்சான்றும். காயத்திரிமந்திரப்பொருள் சிவபிரானே சவிதாவன்று. என்னை? அதனகத்துள்ள பர்க்கசத்தஞ் சிவபிரானுக்கே யிடு குறியாகலானும், அவரே அறிவைப்பிரேரிப்பவராகலானு மென்பது. அப்பர்க்கசத்தம் அகாராந்த மன்று ஸகாராந்த மெனின்;—அதனகத்துள்ள யத்சத்தமுந் தத்சத்தமுமுறையேபுல்லிங்கமு நபுஞ்சகலிங்கமு மாகலிற் றம்முள் அந்வயமுறா. ஆகவே, அந்வயமாதற்குரிய அபின்னலிங்கத்தை அவாய் நிற்கும். அதனால், ஸகாராந்த மென்றல் பொருந்தாதென மறுக்க. வியாகரணநூலார் அஸுன் பிரத்தியயமாக கஞ்னுப் பிரத்தியயமாக ஈற்றில்வந்தபதங்களுக்கு ஆதியில் உதாத்தசுரம் வருமென்றலின், மைத்திராயணீச்சுருதியில் அகாராந்தமாகக் காணப்படுதலின், திரிந்தகாரகமாகிய சுருந்தமேயென்க. இந்த மைத்திராயணீச் சுருதி "பர்க்கர் தியானிக்கற்பாலர்" என்றும், "பர்க்கப் பெயருடையான் உருத்திரன்" என்றுங் கூறுமாகத்தானே, அது ஸகாராந்த மென்றலை நிராகரித்தது. காயத்திரியின் முதற் பாதத்தைக் கடா விடைகளாற் கூறி, "இரண்டாம் பாதம் பர்க்கமயம்" என்ற தலவகாரப்பிராமணமும் ஸகாராந்த மென்றற் கிடந்தராது.

அற்றேல், "எந்தப் பர்க்கன் எமது புத்தியைப் பிரேரிக்கின்றான் அதனைத் தியானிக்கின்றோம்" என்று லிங்க பேதம் போதர அந்வயித்தல் நமக்குஞ் சாலாதெனின்; — காயத்திரிக்குரிய பொருளாகிய சிவபிரானது பெயராகிய பர்க்க சத்தம் அவரின் வேறாகாத ஒளிக்கு முண்மையின், "அதனைத்தியானிக்கின்றோம்" என்பது அந்தப் பர்க்கனுடையை புடைத்தாயவொளியைத் தியானிக்கின்றோமென்று பொருள்படுதலின், எமக்கது சாலாமை யாண்டையதென்க. இது சாம்பமிருதிநூற்றுணிபென்க. "அதுவே யக்கரம்,, என்றும், "அது சவிதாவினான் வரிக்கப்படும் பொருள்" என்றும் "அதனினின்றும் அறிவங்குரித்தது" என்றுஞ் சுவேதாச்சுவதரோபநிடதங் கூறுதலினானுங் காயநதிரிக்குரிய பொருள் சிவபிரானே யென்பது தெற்றெனவுணர்க. இக்காயத்திரி மந்திரம் பர்க்கராகிய சிவபிரானையே யுணர்த்துவதாயினும், சவிதாவென்னுஞ் சத்தமாத்திரை பற்றி ஆதித்தன் மேலுஞ் செல்லும். பிறாண்டும் ஒருகடவுளை யுணர்த்து மந்திரஞ் சத்த வொப்புமையாற் பிறகடவுள் மேலுஞ் செல்லு மென முனிவர் கூறுப: அது அருக்கனைத் தெய்வமாக வுடைய இருக்கு விசுவதேவ சத்த வொப்புமையாற் பிதிரர்மேலும், புஷ்யசத்தவொப்புமையாற் பூடண தேவர் மேலுஞ் செல்லு மாற்றானுணர்க. பிறவுமன்ன. இனி இவ்வாறன்றி, கிரகபூசாவிதியில் "சம்,, என்று தொடங்கிய மந்திரத்தாற் சனி பூசையும், "உத் புத்திய சுவ" என்றதனாற் புதபூசையுங் கூறுதலுங்காண்க. "இருக்கு யசுர் சாமமென்னும் வேதமூன்றனையு நன்குணர்ந்தபிரமன் அவற்றின் சாரமாகிய மூன்றுபாதத்தையுடைத்தாய இக்காயத்திரியைக் கண்டான்" என்று மநுவாற் கூறப்பட்டது.

அரசற்குரிய இறைப் பொருளை அவன் வினைசெய்வார் மூடிகளிடத்திற்கொண்டு அவன் மாட்டுச் செலுத்தல்போலச் சிவபிரானுக்குரிய அவிசை அக்கினி யாகத்திற்கொண்டு அவர் மாட்டடைவிப்ப னென்பது, அருச்சுனன் கண்ணன் மாட்டுச்சமர்ப்பித்த ஈசசம்பந்தமான திரவியங்கள் சிவபிரான்மாட்டுச் சென்றடைந்தமையால் இனிதுணரப்படும். "யாகங்களிற் செய்யப்படுஞ் சோமவிளியும் பசு நியோசனமுஞ் சிவபெருமான் பொருட்டுச் செயற்பால" என்றும், பால் தயிர்முதலிய அவிசும் அவருடையன" என்றும், வேதங்கூறும். சோமமும் பசுவுங் கவ்வியமுஞ் சிவபிரானுடைய வாதல் பற்றியன்றே பசுவினவிசிற்றத்தமக்குரிய கூற்றை அவராணையாற்றேவர் பெறுவாராயிற்றென்பது. பசுவினவி சொழிந்தவற்றிற்குச் சிவபிரானதாணை பெறப்பட்டதின்றாலெனின்;-தலைமைப் பொருளாகிய பசுவினவிசுக்கு அது பெறப்படவே, உபலணக்கத்தால், பசுவினவி சொழிந்தவற்றிற்கும் அதுதானே போதருமென்க. பசுபந்தனக்கிரியை மாத்திரையே சிவபிரான தாணையாற் செயற்பாற்றென்பதும் பொருந்தாது, "எல்லாக்கிரியையுஞ் சிவபிரானதாணையாற் செயற்பால,, எனச் சாம வேதமுடையார் கூறுதலின். "அக்கினியிற் செயப்படுஞ் சோமாகுதியுஞ் சிவபிரானுக்கே யுரியது,, என யசுர்வேதமுடையார் கூறுப. "யாகங்களில் எஞ்சி நின்ற பொருள்களும் யாகபதியாகிய சிவபிரானுடையவே,, என்று யசுர்வேதங் கூறும். "கவ்வியத்தானுஞ் சோம அவிசானும் பக்குவசருவானுஞ் செயப்படு மிருபத்தொரு யாகங்களுக்குஞ் சிவபிரானே அரசர்,, எனவேதங் கூறும். அற்றேல் "அவமக்கினே,, என்னு மந்திரமும், அதனையடுத்த மந்திரமும், "உருத்திரனையுடைத்து அக்கினி,, என்று

கூறுதலின் உடைப் பொருளாகிய சிவபிரானுக்கு அரசு பொருந்தாதாம் பிறவெனின்; — அற்றன்று: அரசனையுடைத்திப் பூமி யென்ற வழிச் சேதனனாகிய அரசனுடைப் பொருளாதலும், அசேதனமாகிய பூமி யுடையானாதலுஞ் செல்லாமையின் செல்லும் பொருட்டுப் பூமியையுடையா னரசன் என மாறிக் கொள்ளப்படுமன்றே; அதுபோல "உருத்திரனையுடைத்து அக்கினி" என்றதூஉங் கோடற் பாற்றாகலின், பொருந்தாமை யாண்டையதென்க. ரௌத்திரபசு வியத்தியில் இம்மந்திரங்கள் சிவபிரானையே யுணர்த்தலினானும் யாகத்திறைமை அவர்க்கே யுரித்தென்க.

அற்றேல், அக்கினியையுடையான் உருத்திரனென்ச் செவ்வனே கூறாது "உருத்திரனையுடைத்து அக்கினி" எனப்பிறழக்கூறிய தென்னையெனின்; — ஒரு பயனோக்கி யங்ஙனங் கூறிற்றென்க. என்னையோ பயனெனின்; — உருத்திரனைப் பற்றியே அக்கினிசிறந்ததெனப் பொருட் பேறெய்து வித்தலே பயனென்க. தந்தையையுடைய மைந்தன், ஆண்டானையுடைய வடிமை, ஆசிரியனையுடைய மாணவகனென்றற் றொடக்கத்தனவாகப் பிறண்டு மங்ஙனம் வருமாறறிக.

சிவபிரானுக்கு யாகபதித்துவம், உருத்திர சூக்த மந்திரத் தொகுதிக்குச் சிரோரத்தினம்போல அணிசெய்வதாய்ச் சிவநாமவலியுடைத்தாய யசுர்வேதத்தானன்றி, "மேதபதி" என இருக்கு வேதத்தானுங் கூறப்படுமென்க. "நிலையற்ற தேகம் விழுதற்குமுன்னர்ச் சிவபூசை செய்தற் பாற்று" என்ற இத்தரும வசனத்திற்கு மூலமாயதூஉம், இந்த "ஆவோ" என்னு மந்திரமே யெனவறிக.

அரசன் கோபமிலனாய் இன்முகமுடையனாயினும் அவன் மாட்டச்சங் குடிகளுக்கு நிகழுதல் இயற்கையே. அது போலச் சிவபிரான் இன்னருண் மூர்த்தியாயினும், அனேக சூரியர் ஒரோவழித் தலைப்பட்டு விளங்கியாங்குத் தேசோமயராய் விளங்குதலின், திரு உருத்திரத்துட் "பீமன்" எனப் படுகின்றார். இன்னும் வேதஞ் சிவபிரானை "அஞ்சத்தக்க வச்சிரம்" என்றுங் கூறும். இங்ஙனஞ் சிவபிரான் மாட்டச்சகாரணத்துவ முண்மையினன்றே, வாயு, பானு, அங்கி, இந்திரன், இயமன் முதலிய தேவர் தத்தந் தொழில்களை அஞ்சிவகித்துய்க்கின்றாரென்க. இப்புயவேதுவைப் பிரமவில்க்கணமென்ப.

"சிவபிரானுக்கு அகோரத்திருமேனி சிவத்திருமேனியென இரண்டுண்டு" என்று வேதங் கூறுகின்றது. அவற்றுள், முன்னையது தம்மை வழிபடு மன்பர்களுடைய ஸம்ஸாரரோக நீங்கச் சிகிற்சை செய்வது; பின்னையது அருளைக்கால் அவர்க்குப் பசுத்துவத்தைக் கெடுத்துச் சிவத்துவாபிவியத்தியை விளைப்பது. சத்திர மிட்டறுத்தன் முதலிய கொடுந்தொழில்கள் வைத்தியன்மாட்டுளவேனும், வியாதியாளர் அவனையே சரண் புகுவர். அதுபோலச் ஸம்ஸாரரோகத்தினால் வருந்து முயிர்கள் அதனிவிர்த்திப்பொருட்டுச் சிவபிரானது கோரத்திருமேனியை வணங்கி, திரு உருத்திர மந்திரங்களாற் சாந்திவேண்டுப. சிவத்துவாபிவியத்திப் பொருட்டுச் சிவத்திருமேனியைச் சமகமந்திரங்களால் உவப்பிப்ப. இவ்விரண்டு மந்திரங்களுஞ் சிவபிரானது ஓமத்தின் பொருட்டும் பிரயோகிக்கப்படும். இச்சமக மந்திரங்கள் அரி அயன் இந்திரன் முதலியாரை அன்னாதிகளுடன் சேர்த்து, ஈயப்படும்

பொருள்களாகக் கூறுகின்றன. சிவபிரான் அவற்றை ஈயுந் தாதா வாகலின், அவனை அங்ஙனங் கூறிற்றில.

பெரியோர் சந்நிதானத்திற் சிறியோரை ஒப்பச் சம்மானியாமை உலகிற் கண்டாமன்றே; அதுபோலச் சிவபிரானது சன்னிதானத்திற் றேவரை ஒப்பச் சம்மானித்தன் முறையன்மை நோக்கி, யாகத்தின்கட் சிவபிரானைக்குறித்துச் செய்யுங் கிரியாந்தத்திற் பரிசேசனஞ்செய்து, வேறுபாடு தோற்றுவிப்ப. இஃதறியமாட்டாது, அஃதிழிபு ப்பற்றிய செயலென்று கூறு மறிவிலாரொன்கடவரொன்க.

ஆன்மாக்களெல்லாம் பாதந்திரமுடைமையாற் பசுக்களெனப்படும். சிவபிரான் சுதந்திரமுடைமையால் அப்பசுக்களுக்குப் பதியெனப்படுவர். சுவேதாச்சுவதரோபநிடதமுதலியன ஆன்மாக்களுக்கு அனீசத்துவமுஞ் சிவபிரானுக்கு ஈசத்துவமுங் கூறுதலின், அவற்றிற்கும், அவருக்கும், அவ்விரு தன்மையும் இயற்கையே யென்க.

அற்றேல், "சிவபிரான் பசுபதித்துவத்தைத் தேவர்கட் பெற்றனர்" என்று வேதங்கூறியது மாறும் பிறவெனின்;—அற்றன்று: இயல்பாக வதனையுடைய சிவபிரான் வேண்டிப் பெற்றாரென்றன் முழுவிரோதமாகலின், அஃதருத்தவாதமென்க. அல்லதூஉம், அதனை வாய்மையெனக்கொள்ளின், தக்கன் வேள்வி சிதைத்தன் முதலிய அற்புதச் செயல்களைக் கூறும் வேத வாக்கியங்கள் போலியாய் முடியும். அதனானும், அஃதருத்தவாதமேயென்பது.

"சிவபெருமானுக்கு அழிவில்லாத அனேக திருமேனிகளுண்டு" என்று இருக்கு வேதங்கூறுகின்றது. "சிவபிரானை

வழிபடுமடியார்கள் அன்னத்தைப் புசிப்பர்" என்று அதுவே கூறுகின்றது. அஃதங்ஙனங் கூறு முகத்தானே, "நாடோறு முணற்குமுன்னர்ச் சிவபூசை செயற்பாற்று" என்னும் விதிக்கு மூலமாதலறிக.

சிவபுத்திரர்களாகிய மருத்துக்களைப் "பரதருனுக்கள்" என்று வேதங் கூறியது, அவருக்குத் திருநடனத்தொழி லுண்மைபற்றி யென்க. பாரத்தை வகித்தல் பற்றிப்பாதனெ னப்படுகின்றாரெனின்;—விசேடமாகிய திருநடனத்தொழில் அவர்க்குளதாயிருக்க, அது பற்றிக்கூறாது, அங்ஙனங் கூறுத லெற்றிற்கென்று கடாவி மறுக்க.

இருக்குவேதத்திற் சிவபிரானை "வீரன்" என்றது, காமன், இயமன், திரிபுரத்தர், தக்கன் முதலியோரைப் பங்கப் படுத்தினமை பற்றியென்க.

ஆயிரஞ் சாகையுடைய சாம வேதத்தில் "ஆன்மாக்களெல்லாவற்றிற்கும் அதிபதி சிவபிரான்" என அவர் மகிமை கூறப்பட்டது. அதனகத்துள்ள தேவ விரதமுதலிய மந்திரங்களிற் சிவகணநாதர் மகிமை கூறப்பட்டது.

குணங்களெல்லாவற்றானும் பிதாவாகிய சிவபிரானோடு சமத்துவமுடைய விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுளென்னுந் திருக்குமாரரிருவருஞ் சாமவேதத்தாற் றுதிக்கப்படுகின்றனர்.

அதர்வசிரசு "பிரமன் முதலிய பொருள்களெல்லாவற்றையுங் கைவிட்டு, சிவத்துவத்தைச் செய்தருளுஞ் சிவபிரானே புருடர்களால் வீடுபேற்றின் பொருட்டுத் தியானிக்கற்

பாலர்; வீடுபேற்றிற் கேதுவாகும் வார்த்தை யிதுவே பிறி தில்லை" என்று கூறிமுற்றிற்று.

யசுர் வேதமுடையார் சிவபிரானோடுடன் றோன்றுதல் பற்றி, அருட்சத்தியாராகிய சிவபிராட்டியாரை அவர்க்குத் "தங்கை" என்று கூறுப. அதர்வண வேதமுடையார் "பிர மன் முதலியோரை நீக்கி, சிவபிராட்டியாரோடு சிவபிரான் றியானிக்கற் பாலர்" என்று கூறுப. வேதங்களெல்லாம் "ஏகனாகிய சிவபிரானே பதிப்பொருள்" என்று கூறினும், யசுர் வேதமுடையார் அவரை அவர் தாதான்மிய சத்தியா ரோடு இருபொருளாக விவகரிப்ப. அச்சிவபிராட்டியாரு டைய வாக்குமனத்துக் கதீதமான பிரபாவமனைத்தையும் புக லப் பிரமனும் வல்லுனனல்லன்.

ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்ணும், நான்கு திருத் தோளும், வெண்ணிறமும் பொருந்திய சிவபிரானுடைய அழிவற்ற திருமேனி ஒன்றேனும், உபாசிப்பவர் வேறுபாடு பற்றிப் பலவாய் விளங்கும். "கிராதவடிவரும், பினாகத் தைத் தரித்தவரும், தோலுடையருமாகிய சிவபிரானை, அவ ருடைய தருமபத்தினியாராகிய சிவபிராட்டியாரோடு பர்வ காலத்திற் செயப்படுஞ் சாகமேதமென்னுங் கிரியையிற் புண் ணிய அவிசுகளால் அருச்சிய பாவனையையுடைய பத்தர் பூசி க்க" என்று கற்ப சூத்திரத்திற் கூறப்பட்டது. "சகத்தினுற் பத்தியின் பொருட்டு வீரியமழையைப்பெய்வதூஉம், அனித் தாகிய மருங்கிற் பத்தினியாராகிய சிவபிராட்டியாரையு நடு விற் சுப்பிரமணியக்கடவுளையுமுடையதூஉம், சராசரமான ரதித் மானதூஉமாகிய விக்கிரகத்தையுடைய சிவபிரானையும், அவ

ருடைய துவாரபாலகர்களையும், அவர் பத்தினியாரையும், தே வசேனையாரோடு தேவசேனரையும், கேத்திரபாலனையும் பூசிக்கின்றனர்" என்று யசுர் வேதத்திற் கூறப்பட்டது. "விரூபாக்கராகிய சிவபிரானைச்சிவபிராட்டியாரோடும், திருக்குமாரர்களிருவரோடும், கணங்களோடும், பாரிடரோடு மட்டமிப் பிரதோஷத்திற் பூசிப்பவர், தம்பாவத்தினீங்கி, மிருத்துவையுங் கடப்பர்" என்று போதாயனத்திற் கூறப்பட்டது.

தேவர்களுடைய மந்திரங்கள் சில; அவை அவர்களுடைய வரையறைப்பட்ட பிரபாவங்களையே கூறும். சிவபிரானுடைய திருநாமங்களையுங் குணங்களையும் வருணிக்குமந்திரங்கள் வரையிறந்தன. திருஉருத்திரத்திற் கூறப்பட்ட சிவபிரானுடைய திருநாமங்களும், திருமேனிகளும், குணங்களுமன்ன.

இனி வேதநூல் சுயம்புவானாலு மாகுக; சிவபிரானால் அருளிச் செய்யப்பட்டதானாலுமாகுக; வேதவாக்கிய முழுதும் பிரமாணமே. வேதத்தின் வேறாயநூல்கள், அதனோடு விரோதியாதவழி, ஆக்கியோர் தாரதம்மியத்துக் கேற்பப் பிரமாணமாம். வேதம்போற்றிவ்விய சிவாகமமும் பிரமாணமாம். அச்சிவாகமம், சிவத்தியானத்துக்கு உபயோகமாயுள்ள பதி பசு பாசமூன்றனையும் விளக்குவதாய், சிவபிரானுக்குத் திருமுகமுதற் திருவடியீறாயுள்ள அங்கங்களாயிருக்கும். யாகவிதிகற்பசூத்திரத்தாற் பெறப்படுதல்போலத் தியாதாவும், தியானமும், தியேயமுமாகிய மூன்றுஞ் சிவாகமத்தாற் பெறப்படும். கிரகியசூத்திரத்து உபநயனவிதியிற் கூறப்பட்ட "அத்துவாநாம்" என்னுமந்திரம் அத்துவாவையும், அத்துவ

பதியையும், அந்நுவாக்களின் ஞானதம்மியத்தையும், சிரேட்டாத்துவா வெனப்படுமெந்திராந்துவாவின் முடிபாயுள்ள சிவத்தையுங் கூறுதலின், சிவாகமத்திற் கூறப்படுமத்துவாக்கள் வேதத்தினுங் காண்க. இருடிகளாற் செய்யப்பட்ட கற்ப சூத்திரமுதலியன பிரமாணமாகுமாயின், பெரிய விருடியாகிய சிவபிரானருளிச்செய்த சிவாகமம் பிரமாணமாமெனக் கூறல் வேண்டுமோவென்க. தவவலியினான் வேத சமூகத்தினின் றெவ்வோர் மந்திரத்தை யுணரப் பெற்றானையன்றே இருடி யென்பவாகலின், இயல்பாகவே அம்மந்திரங்களனைத்தையுமுணராநிற்குஞ் சிவபிரானைப்பெரிய இருடி யென்றற்காசங்கை என்னுமின்றென்க. சாங்கியர் பாச பசு பதியென்னு மூன்றனையு முறையே பிரதானம், புருடன், ஈசனெனப்பெயரிட்டு வழங்குப. அது சிவாகமத்திற்கு முடம்பாடேயென்க.

கிரகிய சூத்திரகாரர் சிவபூசை கூறினாரில்லையாலெனின்;—வேதத்திற் பெறப்படும், புராணங்களிற் பிரசித்தமாயும், போதாயன முனிவரால் விஸ்தரிக்கப்பட்டு மிருத்தலின், அதனை முற்றுணர்ந்த கிரகிய சூத்திர காரர் கூறாதொழிந்தார். அது மட்டோ, அவர் முக்கியமாகிய யஞ்ஞோப வீதத்தையுங் கூறாதொழிந்தார். கூறாததுகொண்டு சிவபூசைக்குக் குறையென்னை? வேதங்களுக்கு உபவிருங்கணங்களாகிய புராணங்களிற் சிவபூசை ஆண்டாண்டு முழங்கப்படுகின்றது. அவ்வுபவிருங்கண வாயிலால் வேதத்தை மூலமாக வுடைய மிருதிகள் கூறாமைபற்றிச் சிவபூசை குறையுறாதென்க. அல்லதூஉம், வேதப்பொருளை நிச்சயித்தற்குப் புராணமங்கமாம். அப்புராணங்களா னிச்சயிக்கப்பட்ட வேதப்பொருளே மிருதிகளாம்.

ஆகவே, வேதம்போலப் புராண வசனம் பலமுடையன; அவற்றின் முன் மிருதிகள் வலியுடையவாகா. அல்லதூஉம், அநுபலத்திக்கு விடையமாகுஞ் சுருதியை மூலமாகவுடைமையினானும், அவை பிரபலபிரமாணமாகா. ஆகவே, பிரத்தியக்கவேதத்தினால் விதிக்கப்பட்ட யாகம் மிருதியின் பார்வையை வேண்டாதவாறுபோலச் சிவபூசையும் அவற்றின் பார்வையை வேண்டாதென்க.

இனிப் "பூர்வான்னத்திற் செயற்பாலனவாகிய நியமங்களைமுற்றி, நியதசித்தனாய்த் தேவபூசையைச்செய்க" என மனுவாற் கூறப்பட்டமையானும், சிவபிரான் றேவருள் வைத்து மகாதேவரெனப்படுதலானும், மிருதியினுஞ் சிவபூசை கூறப்பட்டதென்றே கோடும். அற்றேல், சிவபிரானுக்கு மகாதேவப்பெயருண்மைக்குப் பிரமாணமென்னையெனின்;—அதர்வசிரசே பிரமாணமென்க. அன்றியும், போதாயனசூத்திரத்திற் சிவபிராட்டியாரோடும் இடபதேவரோடுஞ் சிவபிரானுக்கு ஈசான பலிகூறிப்பூசைவிதித்ததூஉங் காண்க. புத்திப்பொருட்டுச் செயப்படுவதூஉம், முத்திப்பொருட்டுச் செயப்படுவதூஉமெனச் சிவபூசை இருவகைப்படும். வேள்வியும் அங்ஙனம் இருவகைப்படும்.

சிவபிரான் றேவருட் பிராமணராகலின், அவர்க்கு நிவேதித்ததனைப் புசிக்கலாகாதென முனிவர் விலக்குப. அற்றாகலினன்றே, "பிராமணருச்சிட்ட மனைத்தையு நிலத்திற் புதைக்க அல்லது சலத்திலெறிக" என்று கற்பசூத்திரத்திற் கூறியதூஉமென வுணர்க. பிராமணராகிய சிவபிரானையே வழிபடுதல் பிராமணர்க்குத் தருமியாம். ஏனைக் கீழ்வருணத்

தராகிய தேவரை வழிபடுதல் பிராமணர்க்குத் தகுதியன்று. அற்றேல், சிவபிரான் றேவருட் பிராமணர் என்றற்குப் பிரமாண மென்னையெனின்;—சாமவேதத்திலுள்ள பிரமத மந்திரமே பிரமாணமென்க.

முனிவர் உயர்புடையதனையு மிழிபுடையதனையு மொப்பு விலக்குப: தீக்ஷித வன்னத்தையும் பதித வன்னத்தையும் விலக்கினமையானும், "சண்டாளன், சண்டிலன், மசான பாலகன், கள்விற்போன், பசு, பிராமணன், அக்கினி, தீக்கையுடையான், பெண்களென்னு மிவரைப் பரிசிக்கற்க" என்றமையானும், "பரிசிக்கிற் பிராயச்சித்தஞ் செய்துகொள்க" என்றமையானும், அக்கினிபோலுந் தீக்கித வன்னத்தை விலக்கியவர்தாமே, "இராசபரிக்கிரகமென்னுங் கிரியைசெய்தபின்னர் அதனைப் புசிக்க" என்றமையானும், சங்கத்தின் அத்தியைப் பாவனமென்று மனுட அத்தியை அபாவனமென்றுங் கூறினமையானும், அதற்குக் காரணங் கூறப்படாதென்க. சிவபிரானை யொழித்தொழிந்த தேவர்களுக்கு நிவேதிக்கப்படுமன்னம் அப்பிராமணருடைய பசிநிவிர்த்திப் பொருட்டுபயோகப்படுக.

வைசுவதேவமென்னுங் கிரியையில் அத்தேவர் சேடத்தால் அக்கினி முதலிய தேவர்க்குப் பலியிடலாகாது. அற்றேல், தேவர்களுக்கு நிவேதியாத அன்னத்தால் வைசுவதேவபலியிட்டு, அவர்க்கு நிவேதித்த அன்னத்தைப் புசிக்கலாமெனக் கொள்ளாமோவெனின்; — கொள்ளாம், என்னை? "அசனத்துக்குரிய அன்னக்கூற்றினொற்றானே பலியிட்டுண்க" என விதிக்கப்பட்டமையின்.

முன்னொருகாலத்திற் "சிவபிரான் பிரமக்கொலைக்காகப் பலியேற்றனர்" என்பதை யுணரப் பெறுவார்க்கு, அது

திருவிளையாடல் மாத்திரையே யென்பது இனிது விளங்கும். சிவபிரான் பிரமன்றலையைப் பறித்தமையானன்றே அவன் றீர்க்காயுளுடையனாய்ச் சீவிக்கின்றானென்க. அது திருவிளையாட்டன்று பிராயச் சித்தமெனின்;—நாபிமுதற்சானு பரியந்தஞ் சாணவத்திரந் தரித்தல், கையிற் கபாலதுண்டந் தரித்தல், கொடி தண்டம் பிணத்தலை தரித்தல், எழுவீட்டிற் பலியேற்றலென விதிக்கப்பட்ட பிராயச்சித்தானுட்டானம் அவர்கட்காணப்படாமையான், அது பொருந்தாதென மறுக்க. அல்லதூஉம், காலபைரவர் செய்த பிரமகத்திக்குச் சிவபிரான் பிராயச்சித்தஞ் செய்துகோடல் செல்லாதென்க. செல்லுமேல், கற்பங்கடோறும் அவர் செய்யும் பிரமகத்தி விட்டுணுகத்தி முதலிய வற்றிற்குஞ் சிவபிரான் பிராயச்சித்தஞ் செய்துகோடல் வேண்டும்; அவ்வாறு செல்லாமையின், அது திருவிளையாடல் மாத்திரையே யென்பது.

பரமேசுராகிய சிவபிரான் றேவர்கட் பசுபதித்துவம் பெற்றுக்கொண்டருளியதனையும், அவர் பயிக்கம் புகுந்தருளியதனையும் நிந்துரைக்கப் பிருகஸ்பதியும் வல்லானென்க.

இனிச் "சிவபிரான் பிரமவிட்டுணுக்களாயினர்" என்றும், "பிறவெல்லாமாயினர்" என்று மறிவிலார் அபேதபாவனை பேணுதற்கேது, பிறிதோராற்றாற் பெறப்படாமையின், அத்தேவருடைந்த இழிவை மறைத்தலொன்றோ மோகமடைதலொன்றோ இரண்டனுளொன்று திட்பமுடைத்தாதல் வேண்டும்.

அற்றேலஃதாக; வேதத்திலாண்டாண்டுப் பிரமப்பொருளாகிய சிவபிரானுக்கும் உயிர்களுக்கும் அத்துவிதங் கூறிய

தென்னை யெனின்; கருடனுமாந்திரிகனும் தம்முள் வேரு தல் வெளிப்படையாயினும், கருடோகம் பாவனை விடத்தை நீக்கன்மாத்திரைக்கே வேண்டப்படும். அதுபோலச் சிவன் சீவன் என்னும் பதார்த்தங்களிரண்டும் தம்முள் வேறென்பது தேற்றமாயினும், உயிர்களுக்கு மலநீக்கத்தின் பொருட்டு வேதத்திலத்துவித சிவோகம் பாவனைகூறப்பட்டது. இங்ஙனமாகலின், அதுகொண்டுதானே நிருபசரிதைக்கியங் கூறுதல் சாலாதென்க.

சிவபிரான் பிரமனுடைய ஐந்தாந் சிரசைக்கிள்ளினரொன்றும், பிரமனரியிருவரும் அவருடைய திருமுடியினையுந் திருவடியினையுந் தேடி யுழன்றனரொன்றும், யாம் முழங்குவேம். அது மூடபுத்தியுடையார் அழுக்கறுத்தற்கேதுவாக.

சோமக்கொடிக்கு விண்டுவின்மாட்டுச் செனகத் துவங் கூறியது கௌணவிருத்திபற்றியாகலின், அது முக்கிய விருத்திபற்றிச் சிவபிரானையே யடையும். சிவபிரானும் விட்டுணுவும் ஒருவருக்கொருவர் செனகராயின், வரம்பு கடந்து, நாமுஞ் சிவபிரானுருவம். சிபிரானு நாமாவர். பொருள்களினியல்பை மாற்றுதல் சிவபிரானுடைய ஆணைக்கு மியலாதென்க. விட்டுணுமுதலிய தேவர் போற்பிறக்கக்கருதுதல் சிவபிரானுக்குஞ் செயற்கரியதொன்ருகும். அது அத்திரி பத்தினியால் வேண்டப்பட்டும் அவள் கருவிற் புக்குதிக்கமாட்டாமையான் இனிது விளங்கும். விட்டுணு கருவிற் புக்குதித்தது சுவேச்சையெனின்;— கருப்பாசயத்திற் கட்டுண்டு நெடுங்காலங் கிடக்க எவனுமிச்சியானாகலின், முற்பிறவியிலீட்டிய வினைக்கீடாகவே அவற்கு இச்சை நிகழ்ந்ததென்றொழிக. அற்றேல், பாரதமுதலிய வற்றில் விட்டுணு

வுடைய அவதாரத்தைச் சுவேச்சையென்ற தென்னையெ னின்;—அது குணவாதமென்க.

சிலர் பிரமனையும் சிலர் விட்டுணுவையும், சிலர் ஏனைத் தேவர்களையுமுபாசிப்ப. அவ்வுபாசனைகள் உலகத்திற் பயன் றருவனவன்றி வீடுபேற்றினைத் தாராவாம். "ஒருவன் ஆகா யத்தை ஆடையாக்கிக்கொள்ளுமாயின், சிவபிரானை உபாசி யாது, துக்கத்தினீங்கி, வீட்டினைத்தலைப்படும்." என்று சுவேதாச்சுவதரச் சுருதிகூறுதலின், வீடுபேற்றின் பொருட் டுச் சிவபிரானையே உபாசிக்க. உடைந்த மரக்கலம் பிறி தொரு மரக்கலத்தைக் கரையடைவிக்கமாட்டாது; அதுபோ லப் பிறந்திறந்துழலும் தேவர் அவ்வாறுழலு மெம்மனோர்க ருக் சரணாகமாட்டார். முயலிற் கோடும், ஆகாயத்திற்பூவும், கானலினீரும், மலடிமாட்டு மகப்பேறுமுளவாயின், ஏனைத் தேவரையுபாசித்தலான் வீடுபேறுந் தலைப்படுமென்க.

தேவருடைய பலபிறப்புக்களை நோக்கும்வழி நமக்குக்கழி பேரச்சநிகழாநின்றது. ஆகலின், சிவபிரான் அப்பெற்றிய வாம் பிறப்புக்களைத் திருவிளையாட்டுக்கேனும் மேற்கொள்ளா தொழிக. சிவபிரான் மாட்டியாம் வேண்டிப்பெறும் பேறி துவே. சிவபிரானை யொழித்தொழிந்த தேவரைத்துதிக்கு மறிவிலாரொன்கடவர்.

சிவனடியார் திருக்கூட்டத்தையே விரும்புவேம். பிள்ளை மைப்பருவத்துஞ் சிவனடியார் திருவடிப் பொடிகொண்டே மண்விளையாட்டயர்வேமுக்கு, ஆண்டாளுகிய சிவபிரானைத் துதிக்க வலியில்லையேனும், அவர் திருவருள் கொண்டே

அவனைத் துதித்தேம். அங்ஙனந் துதித்தேமுக்கு. அடியார்க்கெளிவந்த கருணை வள்ளலாகிய சிவபிரான், உபவீதம் போற்றரித்தருளிய புனிதஆடையிணையும், திரிபுண்டரத்திணையுமுடையராய் வெளிநின்றருளி, தம்முடைய அநுசரனைக்கொண்டு பாயசான்னத்தைக் கொடுப்பித்தருளினர். அதனைப் பெற்றுண்டு, சொப்பன சமாதியோர் என்று கருதி, யோகிகளைப்போலத் தெளிந்தேம்.

இந்நூலைப் படித்து, இதன் பொருளை உள்ளவாறுணரப் பெறுவார்க்கு, கொள்ளற்பாலது பிறிதொன்றில்லை; அறிதற்பாலதும் பிறிதொன்றில்லை; எல்லாப்பேறும் இதனானேயுண்டாம்

இந்நூல் சிவபிரானுக் கோராரமாக. மக்களுககு வேத சிவாகமப்பற்றை விளக்க. பசுநூற்பற்றைக்கெடுக்க சிவபிரான்றிருவடிப்பற்றை வளர்க்க

சதுர்வேததாற்பரியசங்கிரக

முற்றிற்று.

"திரயங்கள்" திரயமென்று படிக்கற்பாற்று.

# பிரகடனபத்திரிகை.

## இதுவரையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள்.

சத்தியரூப சதுர்வேததாற்பரியசங்கிரகம்.
இராமாயணதாற்பரியசங்கிரகம்.
பாரததாற்பரியசங்கிரகம்.
முத்துக்குமாரசுவாமிதிருவருட்பா
திருச்சிற்றம்பலயமகவந்தாதி.
ஸ்ரீ.ல ஸ்ரீ. சுப்பிரமணியதேசிகசுவாமிகளமாலை.

## இனி அச்சிற்பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்

தொல்காப்பியம், சொல்லதிகாரநச்சினார்க்கினியருரை.
இலக்கணவிளக்கப் பொருளதிகாரவுரை.
வெங்கைக்கோவையுரை.
நீதிநெறிவிளக்கவுரை.
கல்வளையமகவந்தாதியுரை.
காஞ்சிப்புராணவசனம்.
சித்தாந்த சைவநெறிவிளக்கம்.
நூனெறிவிளக்கம்.
ஸ்ரீ. அரதத்தாசாரியசுவாமிகள்சரித்திரம்.
ஸ்ரீ. குமரகுருபரசுவாமிகளசரித்திரம்.
ஸ்ரீ. சிவஞானசுவாமிகள்சரித்திரம்.